[1987 ஏப்ரல் 23

அந்தமான் தமிழ்ச் சங்கத்திற்கு நிதி உதவி

466—(*வினா எண் 8498) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தமான் தமிழ்ச் சங்கம் கல்யாண மண்டபம் கட்ட மாநில அரசிடம் நிதி உதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : அந்தமான் தமிழ்ச் சங்கம் திருமண மண்டபம் கட்டுவதற்காக தமிழ்நாடு அரசு ரூ. 50,000 நிதியுதவி வழங்கியுள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமான் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்துள்ள இந்த 50 ஆயிரம் ரூபாயைக் கொண்டு அவர்கள் எந்த அளவுக்கு கட்டிடம் கட்ட முடியும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு ஒரு திருமண மண்டபம் கட்ட வேண்டுமென்றால் 4 லட்சம் ரூபாய், 5 லட்சம் ரூபாய் ஆகிறது. ஆகவே, கல்யாண மண்டபம் கட்ட 4, 5 லட்சம் ரூபாய் ஆகிற நிலையில், இந்த 50 ஆயிரம் ரூபாய் மிகவும் குறைவாக இருப்பதால் இதனை மறு பரிசீலனை செய்து கணிசமான அளவு தொகை ஒதுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமான தமிழ்ச் சங்கம் கல்யாண மண்டபம் கட்டுவதற்காக தமிழக அரசிடம் மட்டும் நிதியுதவி கோரவில்லை. பணம் கொடுக்க முன்வருகிற தமிழர்கள் வெளி நாடுகளில் எங்கெங்கு வாழ்கிறார்களோ அவர்களிடமெல்லாம் கோரியிருக்கிறார்கள். இதையொட்டிதான் இங்கே நடவடிக்கை எடுத்து, தமிழக அரசின் சார்பாக 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமான் தமிழ்ச் சங்கம் கல்யாண மண்டபம் கட்டுவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தனிப்பட்ட முறையில் 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்தார்களே, அதுபோல இங்கேயுள்ள தனிப்பட்ட நபர்கள் யாராவது கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களிடமிருந்தும் அவர்கள் நிதியை பெற்றிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கொடுத்துள்ளது பற்றிய தகவல்இங்கு இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்களும் அந்தமான் தமிழ்ச் சங்கத்திற்கு போகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால் அங்கே போகின்றவர்களுக்கு போதுமான தங்கும் இட வசதியில்லை. ஆகவே தமிழக அரசு அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை கட்டி, இங்கேயிருந்து செல்கிற தமிழர்கள் அதிலே தங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மட்டு மல்லாமல் வெளி நாடுகளில் வாழும் தமிழர்களும் அங்கே செல்கிறார்கள். ஆனால் தங்கும் மாளிகை கட்டுவதைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் சுற்றுலா வாரியம்தான் அதை கவனிக்க வேண்டும்.

புதிய இசைக் கல்லூரி ஆரம்பித்தல்.

467—(* வினா எண் 9877) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத் தலைமையிடத்தில் புதிய இசைக் கல்லூரி துவங்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். நீலகிரி மாவட்டம் கல்வியில் மிகவும் பின் தங்கியுள்ள ஒரு மாவட்டம். அங்கே ஒரு புதிய இசைக் கல்லூரியை ஏற்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் பயன்படும். ஆகவே இதனை மறு பரிசீலனை செய்து அந்த மாவட்ட மக்களுக்கு இருக்கின்ற இந்தக் குறையை தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?